**தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - 2024**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக்

காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துக்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முகப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் மூன்று முதல் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதோடு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். ஆனால் பல்கலைக்கழகத்தின் காணி 2011 ஆம் ஆண்டில் ரூபா 450,330,000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதும், அது நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அதன் பின்னர் எந்தவொரு மீள்மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒலுவில், சம்மாந்துறை மற்றும் மல்வத்தை ஆகிய காணிகளுக்கான தளவமைப்பு வரைபடங்கள் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் மட்டக்களப்பு பிராந்திய மதிப்பீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பின்னர் காணிகளை மதிப்பிடுதல் மற்றும் உடன்படிக்கைக்கான கட்டணம் ரூபா 9 மில்லியன்கள் என மாவட்ட மதிப்பீட்டாளரினால் அறிவிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்தின் நிதி நிலைமை காரணமாக தற்போது இத் தொகையினை செலுத்த முடியாதுள்ளது. ஆனால் எதிர்காலத்தில் இந்நோக்கத் திற்காக நிதியினை ஒதுக்கத் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தகுதிகாண் விரிவுரையாளரொருவரின் முறியின் காலப்பகுதியானது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்ததுடன் அவரிடம் பெற வேண்டிய முறி ரூபா 5,002,095 தொகை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்கூறிய தொகையினால் பெறவேண்டியவை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 8 வருடங்களுக்குள் அவருடைய முதுமானிப் பட்டப்படிப்பினை நிறைவு செய்யாமையினால் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட விரிவுரையாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் UGC/HR/ 2/3/106/Lec. இலக்க 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 18 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் கீழ் வழங்கப்படும் கொவிட்-19 சலுகையைப் பயன்படுத்தி மீண்டும் சேவையில் மீளமர்த்த காத்திருக்கின்றார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அமைச்சரைவையின் அனுமதியினைக் கோரியுள்ளது. மேலும், இறுதி முடிவு எடுக்கப்பட்டவுடன் அவருடைய முறிப் பெறுமதி அங்கீகரிக்கப்படும். | முறியின் பெறுமதியினை மீளப்பெற முடிவு மேற்கொள்ளப்பட்ட வுடன் அதை நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டியவையாக சேர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கருத்திட்டக் காலத்தில் 06 ஊழிய அங்கத்தவர்கள் AHEAD கருத்திட்டத்தின் கீழ் ரூபா 41,523,530 பெறுமதியான மானியத்தின் மூலம் அவர்களுடைய கலாநிதிப் பட்டத்தினை முடித்திருந்தனர். இத்தொகையானது கட்புலனாகாச் சொத்துக்களின் கீழ் மனிதவள மூலதன அபிவிருத்தி கருத்திட்டமாக மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட் டிருக்கவில்லை. | இது மூலதனமாக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படும். | கட்புலனாகாச் சொத்துக்களின் கீழ் மனித மூலதனமாக மூலதனமாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் தங்கள் பதவிகளை விட்டு வெளியேறிய 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியிருந்த கடன்கள், முற்பணங்கள் மற்றும் சம்பளங்களின் மொத்தத் தொகை ரூபா 2,006,843 அறவீடு செய்யப்படாமலிருந்தது. குறித்த தொகை 2 தொடக்கம் 24 வருடங்கள் வரை பெறவேண்டியவைகளாக இருந்து வருகின்றன. | சம்மந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே தாபனக் கிளையினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஏனைய சில சட்ட வழக்கில் உள்ளது. | பெற வேண்டியவைகளை அறவீடு செய்ய உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 04/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 1 | 2024 திசெம்பர் 31 இல் கூட்டுமொத்தம் ரூபா 86,454,652 பெறுமதியான 05 குறுங்கால நிலையான வைப்புக்களுக்கு நிதியமைச்சின் உசாவல் மற்றும் அனுமதி மற்றும் கல்வி அமைச்சின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. | 2024 – 2025 ஆண்டுகளுக்கான நிலையான வைப்புக்களுக்கு பல்பலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரப்பட்டிருந்தும் அனுமதி கிடைக்கப்பெறவில்லை. சுமார் ரூபா 23 மில்லியன்கள் வட்டியினை இழக்காமலிருக்க முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. | நிலையான வைப்புக்களுக்கு நிதியமைச்சு மற்றும் கல்வியமைச்சிடம் அனுமதி பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் | | | |
| (i) | பிரிவு 38(1) (இ) மற்றும் 38(2) | பல்கலைக்கழகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தாபித்துப் பேணப்படல் வேண்டும். மேலும், அதன் விளைதிறனை காலக்கிரமத்தில் மீளாய்வு செய்து கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இருந்த போதிலும், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை. | உப வேந்தரின் வழிகாட்டலின் பிரகாரம் சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் முன் கணக்காய்வு செய்யப்பட்டு உள்ளகக் கட்டுப்பாடு செயற்படுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் 14 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தீர்வு காணப்பட்டன. மேலும் சுய நிதியீட்டச் செயற்பாடுகளின் மேற்பார்வையினை பலப்படுத்த உள்ளக குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. | வெளிப்படைத் தன்மை மற்றும் உடன்பாட்டினை உறுதி செய்யும் வகையில் முறையான மீளாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பிரிவு 38(1) (உ) | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 2025 மே 31 வரை அனுப்பப்பட்ட 14 கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் 47 முதல் 135 நாட்கள் வரை தாமதமாக பெறப்பட்டன. | எதிர்காலத்தில் பதில்கள் உடனடியாக வழங்கப்படும் என பல்கலைக்கழகம் உறுதியளிக்கின்றது | கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் உரிய காலத்தில் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள். | | | |
| (ii) | நி.பி. 103(1) | 2024 ஆம் ஆண்டுக்கான இருப்பு மெய்யாய்வின் படி பல்வேறு பிரிவுகளிலும் மொத்தமாக 538 வகையான பொருடகள் சரிபார்க்கப்படவில்லை, காணப்படவில்லை, குறைபாடு, இடமாற்றம் செய்யப்பட்டது, பெறப்படவில்லை மற்றும் மேலதிகம் என்ற வகைப்படுத்தலின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்தன. எனினும் இது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருடகள் அனைத்தயும் சரி பார்ப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இணக்கம் செய்யப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்க நடவக்கை எடுக்கப்படும். | இருப்பு மெய்யாய்வு அறிக்கையினை மீளாய்வு செய்து நிதிப்பிரமாணத்தன் படி ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி. 1645 (ஆ) மற்றும் நி.பி. 1647 (அ) | 18 வாகனங்களுக்கான வாகன ஓட்டப் பதிவேடுகளின் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் ஓட்டப் பதிவேடுகளின் கணனிமயப்படுத்தப்பட்ட மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின்படி வாகன ஓட்டப் பதிவேடுகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XX இன் பிரிவு 3 (1) மற்றும் | பல்கலைக்கழக உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை என்பன விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். இருந்த போதிலும் 102 | இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உத்தியோகத்ர்களின் வகுதிக்கேற்ப வரவினை மேற்பார்வை செய்வதற்கான முறை வெவ்வேறு விதமாக உள்ளது. நூலக | தாபன விதிக்கோவை மற்றும் சுற்றுநிரூபத்தினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10 யூலை 2017 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | தற்காலிக விரிவுரையாளர்கள் தங்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்கையினை விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தியிருந்த போதும் 211 நிரந்தர விரிவுரையாளர்கள், 05 நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் 44 வருகை விரிவுரையாளர்கள் தங்களது வருகையினை விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் மற்றும் வருகை விரிவுரையாளர்கள் நெகிழ்வான அட்டவணைகளின் பிரகாரம் கைவிரலடையாள இயந்திரத்திற்குப் பதிலாக சான்றுப்படுத்தப்பட்ட வரவு அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றனர். ஆனால் பகுதி நேர விரிவுரையாளர்கள் மணித்தியால அடிப்படையில் வேலை செய்வதனால் கைவிரலடையாள இயந்திரத்தினைப் பயன்படுத்துகின்றனர். இந்த ஏற்பாடு ஒவ்வொரு பங்களிப்பின் தன்மைக்கேற்றவாறு உள்ளது. மற்றும் கடமையினை வினைத்திறனாக மேற்பார்வை செய்வதற்கு உதவுகின்றது. | |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனையானது ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒருமுறை, ஒவ்வொரு 25,000 கிலோமீட்டர்கள்களுக்கு ஒருமுறை அல்லது பாரிய இயந்திரப் பழுது பார்த்தலுக்கு பின்பு மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் 25 வாகனங்களுக்கு 3 தொடக்கம் 10 வருடங்களாக எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை நடத்தப்பட்டிருக்கவில்லை. | ஈஸ்டர் தாக்குதல், பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடி மற்றும் அதிகரித்த அலுவலக மற்றும் களவிஜய பயணங்களின் தேவை காரணமாக பல்கலைக் கழகத்தினால் திட்டமிட்டபடி உரிய காலத்தில் எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனையினை நடத்த முடியவில்லை. | வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை சுற்றுநிரூபத்தின் பிரகாரம் தொடரச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2015 நவம்பர் 17 ஆம் திகதிய தாபன சுற்றறிக்கை இலக்கம் 15/2015 | உள்ளக மற்றும் வெளிவாரி மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் 03 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டும். இருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் வெளிவாரி மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் 08 தொடக்கம் 12 மாதங்கள் வரை தாமதமாக வெளியிடப்பட்டுள்ளது. | சில பரீட்சகர்கள் அவர்களின் வேலைப்பழு காரணமாக காலக்கெடு முடிந்த பின்பே பெறுபேறுகளை சமர்ப்பித்திருந்தனர். மேலும், அடிக்கடி வரும் வெள்ள எச்சரிக்கைகள் மற்றும் CEDPL அலுவலகத்தினை மீள ஒழுங்கு செய்தமையினால் பெறுபேறுகளை உரிய காலத்தில் வெளியீடு செய்வதில் பாதிப்பு ஏற்பட்டது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பரீட்சைப் பெறுபேறுகளை குறிப்பிட்ட 3 மாதங்களுக்குள் வெளியிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2024 சனவரி 29 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 | கற்கை விடுமுறை முறி ஒப்பந்தத்தின் பிரகாரம் எந்தவொரு ஒப்பந்த மீறலும் நிறையளிக்கப்பட்ட சராசரி கடன் விகித (நிசகவி) அடிப்படையில் முறித் தொகையுடன் வட்டியும் சேர்த்து அறவிடப்பட வேண்டும். இருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 இல் நிலுவையாக காணப்பட்ட முறித்தொகை ரூபா 34,453,532 இற்கான ரூபா 4,134,423 வட்டியினை அறவீடு செய்ய பல்கலைக்கழகத்தினால் தவறவிடப்பட்டிருந்தது. | அறவீடானது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இரண்டு அறவீடுகள் பணிக்கொடையில் அல்லது ஓய்வூதிய நிதியிலிருந்து மேற்கொள்ளப் பட்டுள்ளது. நான்கு உத்தியோகத்தர்கள் BRRC மற்றும் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் தவணை அடிப்படையில் செலுத்தி வருகின்றனர். மற்றய ஒன்று பிணையாளியின் முலம் பெருமளவு செலுத்தப்பட்டுள்ளதுடன் மற்றொன்று மாதாந்த மீள்செலுத்துகையில் உள்ளது. 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறும் BRRC கூட்டத்தில் அனைத்தும் மீளாய்வு செய்யப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவையிலுள்ள முறி மீதிகளுக்கான வட்டியினை அறவீடு செய்ய நடடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2024 சனவரி 29 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 மற்றும் உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 | வழிகாட்டியின் பிரகாரம் பதவி விலகல்களுக்கான முறி அறவீடுகள் 48 மாதங்களுக்குள்ளும், பதவி வெறிதாக்கல்களுக்கான முறி அறவீடுகள் 3 மாதங்களுக்குள்ளும் முடிக்கப்பட வேண்டும் மற்றும் 60 மாதங்களுக்கு மேலுள்ள அறவீட்டுத் திட்டத்திற்கு திறைசேரியின் அனுமதி தேவைப்படும். எனினும், விதிமுறைகளுக்கு முரணாக 240 தவணைகள் வரையுள்ள அறவீட்டுத் திட்டமானது திறைசேரியின் அனுமதியின்றி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | தனிப்பட்ட வேறுபாடுகள் அனைத்தும் BRRC மற்றும் சபையினால் அந்தந்த காரணங்களின் பிரகாரம் (உதா. நிதி நெருக்கடி) அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வழிகாட்டி நிட்சயமாக பின்பற்றப்படும். | பரிந்துரைக்கப்பட்ட எல்லையினை மீறிய அறவீட்டுத் திட்டத்திற்கு திறைசேரியின் அனுமதி பெற வேண்டும், நிதி மற்றும் உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கைகளுடன் இணங்குவதனை உறுதி செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 151,280,866 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 52,534,712 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 98,746,154 தொகையான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவில் ஏற்பட்ட ரூபா 272,370,851 அதிகரிப்பே மேற்படி பின்னடைவுக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிதான வருமானம் மற்றும் செலவுகளின் காலப் பகுப்பாய்வு

பல்கலைக்கழகத்தின் வருமான மூலங்களாகிய மூலதன மானியத்தின் கடன்தீர்த்தல் மற்றும் சுய நிதி நிகழ்சித்திட்டம் என்பவற்றின் வருமானம் முறையே 14 சதவீதம் மற்றும் 23 சதவீதமாக குறைவடைந்துள்ளதுடன், முன்னைய ஆண்டினை விட பணிக்கொடைச் செலவீனம் 245 சதவீதம் அதிகரித்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் ஆண்டு முறி ஒப்பந்தத்தினை மீறிய விரிவுரையாளரிடமிருந்து ரூபா 1.73 மில்லியன்களை அறவீடு செய்வதற்கு பல்கலைக்கழகத்தினால் தவறவிடப்பட்டிருந்ததோடு 09 வருடங்களின் பின்பே 2013 இல் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சபையானது இதனைப் பற்றிய அறிக்கை தயாரிப்பதற்கு உப குழுவொன்றை நியமித்துள்ளது. | பொது நிறுவனங்கள் மீதான குழுவின் பரிந்துரையினை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருந்தது. அவர் மீள்வருகை தந்து 06 வருடங்களுக்குள் அறவீடு செய்யாமையின் காரணமாக அத்தொகையினை மீளச் செலுத்துமாறு உயர் நீதிமன்றத்தினால் உத்தரவு வழங்கப்பட்டிருந்ததுடன் நிருவாகத்தின் கவனயீனம் காரணமாக ரூபா 1.73 மில்லியன் இழப்புக்கு வழிவகுத்திருந்தது. மேலும், 2017 இல் பொது நிறுவனங்கள் மீதான குழுவினால் அத்தொகையினை அறவீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தும் பல்கலக்கழக சபையினால் 07 வருங்களுக்கு மேலாக எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையானது முடியும் கட்டத்திலுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒரு புதிய உடற்கல்விப் பணிப்பாளர் பதிவியினை ஏற்கும்போது, அனைத்துச் சொத்துக்களும் மற்றும் ஆவணங்களும் முந்தய பணிப்பாளரால் முறையாக கையளிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இருப்பு மெய்யாய்வுச் சபையின் அறிக்கையின் பிரகாரம் ரூபா 3,733,784 பெறுமதியான நுகர்வுப் பொருட்களில் ரூபா 87,600 பெறுமதியான நுகர்வுப் பொருட்கள் மாத்திரமே கையளிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 3,646,184 வேறுபாடு காணப்பட்டதுடன் துணை ஆவணங்களின்மையால் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், ரூபா 10,293,811 மதிக்கதக்க நிலையான சொத்துக்களும் புதிய பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் இருப்பு அறிக்கையினையும் இருப்பு மெய்யாய்வு அறிக்கையினையும் ஒப்பிட்டுப் பார்த்த போது சில பொருட்கள் உடற்கல்வித் திணைக்களத்தில் காணப்பட்டது. அடையாளம் காணப்படாத பொருட்களுக்காக ஒரு குழு அமைக்கப்படும் என்பதோடு பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு அவதானிப்புக்கள் அறிக்கையிடப்படும். | இடமாற்றத்தின் போது சகல சொத்துக்களையும் ஆணங்களையும் முறையாக பதிவு செய்து, சரி பார்த்து கையளிப்பதற்கு முறையான கையளித்தல் செய்முறையினை பல்கலைக்கழகம் அமுல்படுத்துவதன் மூலம் கணக்களிதன்மையினை பேணுவதற்கும் முரண்களை தடுக்கவும் முடியும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மற்றும் 2024 இற்கு இடைப்பட்ட காலப்குதியில் ரூபா 9,375,155 பெறுமதியில் CCTV முறைமை பொருத்தப்பட்டிருந்தும் முறையான கண்காணிப்பு பொறிமுறை மற்றும் மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு முறைமை என்பன ஏற்படுத்தப்படாததன் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பு நோக்கத்தனை அடைவதற்கு எந்தவொரு செயலூக்கமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காததுடன் மின்னணு பழுதுபார்க்கும் சேவைப் பிரிவினரினால் உபகரணங்களின் பழுது பார்ப்பு மாத்திரமே மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களுக்கு தெளிவான கண்காணிப்புப் | நிதி, உத்தியோகத்தர் பற்றாக்குறை மற்றும் பிற முன்னுரிமை காரணமாக மத்திய கண்காணிப்பு முறைமை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முழுத் தொகுதி தாமதமானது. பல்கலைக்கழகமானது அர்ப்பணிப்பான உத்தியோகத்தர்களை நியமித்து, நிதி ஒதுக்கீடு செய்து CCTV முறைமையினை வினைத்திறனாக மேம்படுத்த SOPs ஐ உருவாக்குவதன் | CCTV முறைமையினை திறம்பட பயன்படுத்துவதனை உறுதி செய்ய பல்கலைக்கழகத்தினால் விரைவாக ஒரு மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பினையும் கண்காணிப்பு முறைமையினையும் நிறுவுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்களோ அல்லது முறைமை முகாமைத்துவமோ காணப்பட்டிருக்கவில்லை. | மூலம் பாதுகாப்பினை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பொது பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகமானது மானிய உதவுத் தொகையினை 30 தவணைகளில் செலுத்துதல் வேண்டும். இருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் 31 வது மற்றும் 32 வது தவணைகளாக ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களில் ரூபா 2,520,000 தொகை மேலகமாக செலுத்தப்பட்டிருந்ததோடு அம்மேலதிகத் தொகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதவுத்தொகையிலிருந்து ரூபா 900,000 மீள அறவிடப்பட்டிருந்த போதிலும் மீதமான ரூபா 1,620,000 கணக்காய்வுத் திகதியான 2025 யூன் 17 வரை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 1,620,000 மேலதிகமாக செலுத்தப்பட்டதன் விளைவாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாத நிலையான வைப்புக்கான வட்டி வீதம் 9.25 % இன் அடிப்படையில் ரூபா 74,925 பெறுதியான வட்டி இழக்கப்பட்டிருந்தது. மேலும், நிதிப்பிரமாணம் 156(1) இன் படி இழப்புக்கான பொறுப்பு அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | 4,800 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நலன்புரி சேவைகள் பிரிவினால் மானிய உதவுத்தொகை மற்றும் மஹாபொல கொடுப்பனுவுகள் தனியொரு உத்தியோகத்தரினால் கணனிமயப்படுத்தப்படாத முறையினூடாக மேற்கொள்ளப்பட்டுகின்றது. இதன் விளைவாக இஸ்லாமிய கற்கைகள் திணைக்களம் மற்றும் அரபு மொழி கற்கைப் பிரிவில் மேலதிக கொடுப்பனவுப் பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது. விசேட பட்டப்படிப்பினை இடைநிறுத்தம் செய்த மாணவர்களுக்கு 40 தவணைகளுக்குப் பதிலாக 30 தவணைகளுக்கு மேல் பணம் செலுத்தப்பட்டிருந்ததோடு இத்தவறு உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு ரூபா 900,000 (70%) அறவீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூபா 788,000 அறவீட்டின் கீழ் உள்ளது. இப் பிரச்சினை வேண்டுமென்றே செய்யப்படவில்லை மற்றும் இதனை திருத்துவதற்காக வேலைப்பழுக் குறைப்பு மற்றும் அதிக உத்தியோகத்தர்களின் நியமிப்பு என்பன மேற்கொள்ளப்படும். | மாணவர்களிடமிருந்து அல்லது பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதோடு கணனிமயப்படுத்தப்பட்ட உதவுத்தொகை கண்காணிப்பு முறைமை மூலம் உள்ளகக்கட்டுப்பாட்டினை பலப்படுத்த வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆங்கில விரிவுரையாளரொருவர் நோதும்பிரியா பல்கலைக்கழகம் மற்றும் அல்டா மலேசியா பல்கலைக் கழகத்திலும் கலாநிதி பட்டப்படிப்பிற்கான முறித்தொகை முறையே ரூபா 2,802,746 மற்றும் ரூபா 3,866,804 ஆகிய இரண்டு முறிகளும் மீறப்பட்டிருந்தது. எனினும் முதலாவது முறி மீறலினை முழுமையாக அறவீடு செய்வதற்கு முன்பே இரண்டாவது முறி அனுமதி | விரிவுரையாளரின் முதலாவது முறி மீறுகையின் செயற்பாடு தாமதமடைந்தமையினாலும் அவரது விடயத்தில் சிக்கல்தன்மை மற்றும் நீடித்த தன்மை காரணமாக பல்கலைக்கழக சபையினால் இரண்டாவது முறிக்கு அனுமதி | முதலாவது முறி முழுவதும் செலுத்தப்பட்ட பின்னரே இரண்டாவது முறிக்கு அனுமதி வழங்க நடவடிக்கை பல்கலைக் கழகத்தினால் எடுக்கப்படுவதோடு அதன் மூலம் சரியான நிதிக்கட்டுப்பாட்டினையும் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. இது பல்கலைக்கழகத்தின் நிதி மேற்பார்வையின் குறைபாட்டினை வெளிக்காட்டுகின்றது. | வழங்கப்பட்டிருந்தது. | கணக்களி தன்மையினையும் உறுதி செய்தல் வேண்டும். |

**3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| AHEAD கருத்திட்டத்தின் கீழ் UBL பிரிவினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,226,556 பெறுமதியான சொத்துக்கள் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்து UBL அலுவலக தளபாடங்களும் UBL இன் இருப்புக்களில் கணக்கிடப்பட்டு உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதோடு AHEAD கருத்திட்டத்தின் கணக்காய்வாளர்கள் பொருட்களை சரிபார்த்தற்கான புகைப்படங்களும் ஆதாரங்களும் உள்ளன. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அக்றோடெக் பூங்கா – மல்வத்தை கருத்திட்டம் எனும் பெயரில் 19 உப கருத்திட்டங்களுடன் 2021 மார்ச் 29 ஆம் திகதி முடிக்க வேண்டிய கருத்திட்டம் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததோடு அது 04 தடவைகளில் 2023 ஆகஸ்ட் மாதம் 31 கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் திகதி வரை 07 உப ஒப்பந்தங்கள் மாத்திரமே நிறைவு பெற்றிருந்ததோடு குறைவான செயல்முன்னேற்றம் காரணமாக ரூபா 51,095,561 செலுத்தப்பட்டதன் பின்னர் இருதரப்பினராலும் ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஒப்பந்தகாரரின் முன்தகமை முறையாக பரீட்சிக்கப்படாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமையினால் 19 வேலைகளில் 07 வேலைகள் மாத்திரமே முடிக்கப்பட்டிருந்தன. மேலும், மீதி 07 வேலைகளும் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் வழங்கப்பட்டிருந்ததோடு 05 வேலைகளுக்கு ரூபா 46,497,785 தனியான நிதி தேவைப்படுகின்றது. வேலை முற்றுப்பெறாததன் விளைவாக ரூபா 777,600 பெறுமதியுள்ள UV அல்டா பொலித்தீன் உறைகள் 06 மாதங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமலிருந்தது. மேலும் 2018 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 290,000 பெறுமதியான இரண்டு சக்கர உளவு இயந்திரமானது | அக்றோடெக் பூங்கா – மல்வத்தை கருத்திட்டதில் 19 உபகருத்திட்டங்கள் உள்ளன, அது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கவிந்து பில்டேர்ஸ் இற்கு வழங்கப்பட்டிருந்தது எனினும் பொருளாதார நெருக்கடி மற்றும் வங்குறோத்து நிலை காரணமாக வேலையின் செயன்முன்னேற்றம் குறைவடைந்திருந்ததுடன் முடிக்கப்பட்ட வேலைகளுக்காக 51 மில்லியன் செலுத்தப்பட்டு மீண்டும் 07 வேலைகள் வழங்கப்பட்டன மற்றும் 05 ஏனைய வேலைகளும் மாற்று நிதி மூலத்தின் ஊடாக முடிக்கப்படும். மேலும், சேதமடைந்த UV அல்டா பொலித்தீன் உறைகளளுக்கான கொடுப்பனவு ரூபா 777,600 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன். உழவு இயந்திரத்தினை மீளமைக்கவும் சுழலும் உழவு இயந்திர இணைப்பினை கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பல்கலைக்கழகமானது ஒப்பந்தகாரரின் இயலளவினை கவனமாக மதிப்பீடு செய்து, கருத்திட்டத்தினை மேற்பார்வை செய்து உரிய நேரத்தில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை சரியாகப் பயன்படுத்தி தாமதம் மற்றும் வீண்விரையங்களைத் தடுத்து பணத்திற்கான பெறுமதியினை அடைய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுழலும் உழவு இயந்திர இணைப்பு கொள்வனவு செய்யப்படாததன் காரணமாக 07 வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தில் குடும்ப மற்றும் தனிநபர் குடியிருப்புக்களை அமைப்பதற்கு 2019 நவம்பர் 21 ஆம் திகதி வேலை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதனுள் 6 மில்லியன் உப ஒப்பந்த பெறுமதிக்கு 30 KW சோலர் முறைமையும் அடங்குவதோடு அதற்கான மதிப்பீடானது 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி பெறப்பட்டிருந்த போதும் இலங்கை மின்சார சபையிடமிருந்து சோலர் நிறுவுகைக்கான அனுமதி 21 மாதங்களின் பின்னர் 2025 ஏப்ரல் 17 இல் பெறப்பட்டதன் விளைவாக 2024 ஜுன் 30 முதல் எதிர்பார்க்கப்பட்ட சோலர் மின் அலகு விலையானது ரூபா 37 இருந்து ரூபா 27 ஆக குறைவடைந்ததுடன் இதனால் 06 மாதங்களுக்கான சோலர் செயற்பாட்டின் மூலம் கிடைக்க வேண்டிய வருமானத்தில் ரூபா 768,456 இழப்பு ஏற்பட்டிருந்தது. | இலங்கை மின்சார சபையினால் தேறிய மீட்டருக்கான அனுமதியினை 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதியன்றே கிடைக்கப்பெற்று 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சோலர் சக்தி செயற்பாடு குறிக்கப்பட்டு வருகின்றது மற்றும் முறைமையானது தற்போது இயங்குவதோடு மின்சார வினியோக அமைப்புக்கு பங்களிப்பு செய்யப்படுகின்றது. கட்டணம் நிலையானதாக உள்ளதனால் ஒப்பந்தத்திற்கான தாமதம் எந்த நிதி இழப்புக்களையும் ஏற்படுத்தவில்லை என்பதோடு வருமானம் தாமதமே தவிர வருமானம் குறைக்கப்படவில்லை. | வருமான தாமதங்களினை தடுப்பதற்கு பல்கலைக்கழகமானது இலங்கை மின்சார சபையிடமிருந்து சரியான நேரத்தில் ஒழுங்குமுறை ஒப்பதல்கள் பெறுவதோடு எரிசக்தி அல்லது உட்கட்டமைப்புத் திட்டங்களிலிருந்து சரியான நேரத்தில் பயன் பெறுவதனை உறுதி செய்தல் வேண்டும். |
| | மேலும், குறித்த வேலையில் ஏற்பட்ட சேமிப்பான ரூபா 4,211,852 தொகையினைப் பயன்படுத்தி ரூபா 3,957,250 பெறுமதியான தளபாடங்களை முறையான பெறுகை நடைமுறைகளைப் மீறி கூறு விலைகள் பெறப்படாமலும், மதிப்பீடுகள் செய்யப்படாமலும் மற்றும் தொழிநுட்பக்குழுவின் பரிந்துரையினைப் பெற்றுக்கொள்ளாமலும் குறித்த ஒப்பந்த காரரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | வேலையில் ஏற்பட்ட சேமிப்பான ரூபா 4,211,852 தொகையில் ரூபா 3,957,250 தொகை உத்தியோகத்தர்களின் வதிவிடத்திற்கு அத்தியாவசியமான தளபாடங்களின் பெறுகைக்கு பயன்படுத்தப்பட்டது. பெறுகையானது பிரதான ஒப்பந்த காரரினூடாக ஒப்பந்த எல்லைக்குள்ளும் பொறியியலாளர் மற்றும் தொழிநுட்ப விவரக்குறிப்புக்களினைப் பின்பற்றியும் உரிய கால விநியோகம் உறுதி செய்யப்பட்டும் உத்தியோகத்தர்களின் தேவைகளை கருத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்டது. | அனைத்துப் பெறுகைகளும் இலங்கை பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க மேற்கொள்வதனை பல்கலைக்கழகம் உறுதி செய்தல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டடின் இறுதியில் பல்கலைக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட கல்விசாரா உத்தியோகத்தர்களில் 527 பதவியணிகளில் 116 பிரதான வெற்றிடங்களான பதிவாளர், கணக்காளர் மற்றும் தலைமை மார்சல் தவிர 411 கல்விசாரா உத்தியோகத்தர்களே காணப்பட்டனர். இக்குறைபாடானது பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பினை தடுத்தும் உள்ளகக்கட்டுப்பாட்டின் வினைத்திறனைக் குறைத்தும் உள்ளது. | ஆட்சேர்ப்பு இடைநிறுத்தம், தொழிற்சங்க நடவடிக்கைகள், தலைமைத்துவ மாற்றங்கள் மற்றும் அனர்த்தங்கள் காரணமாக வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ஆட்சேர்ப்பினை 2025 யூன் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்த தாலும் நியமனத்திற்கான புள்ளிகளுக்காக காத்திருப்பதோடு சம்மந்தப்பட்ட வெற்றிடங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | கல்விசாரா உத்தியோகத்தர்களை விரைவாக நியமிப்பதற்கு பல்கலைக் கழகத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டடின் இறுதியில் பல்கலைக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட 283 கல்விசார் பதவியணிகளில் 74 பொறியியல் பீட பிரதான வெற்றிடங்களைத் தவிர 209 கல்விசார் உத்தியோகத்தர்களே காணப்பட்டனர். பிரதான பதவிகளான பேராசிரியரகள், சிரேஸ்ட்ட விரிவுரையாளர்கள் மற்றும் பிரதி நூலகர் ஆகியோரின் வெற்றிடங்களானது கற்ப்பித்தல், ஆராய்ச்சி மற்றும் மாணவர்களின் மேற்பார்வை என்பன பாதகமாக பாதிக்கப்பட்டுள்ளது. | பொதுநிறுவனங்களின் சுற்றறிக்கை இலக்கம் 04/2022 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டியின் பிரகாரம் உரிய அதிகாரத்தின் அனுமதியுடன் முக்கியமானதும் விசேடமானதுமான ஆட்சேர்ப்பினைத் தவிர ஏனைய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2023 நவம்பர் மாதம் 20 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் அமைச்சரவையின் அனுமதியுடனே ஆட்சேர்ப்பு செய்ய முடியும். மேலும், ஆட்சேர்ப்புக்கான அனுமதியினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளது மற்றும் அனுமதியின் பின்னர் ஆட்சேர்ப்பு இடம்பெறும். | கல்விசார் உத்தியோகத்தர் களின் ஆட்சேர்ப்பினைத் துரிதப்படுத்துவதற்கு பல்கலைக் கழகத்தினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினை பின்தொடர வேண்டும். |